# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 537/2016/பே**

**ஆணை நாள்: 09 –07–2018**

**1.திரு. என் வெங்கடேஷ், B.E.M.B.A**
**மற்றும்**
**2.திரு. ஏ.கே.ராஜேந்திரன்,**
**3.திரு .இரா.கருப்பசாமி,**
**4.திரு.ஏ.பி.குப்பசாமி,**
**ராஜேஸ்வரி நகர்,**
**எஸ்.எஸ்.குளம் (வழி),**
**கோயம்புத்தூர்–641 107.** — முறையீட்டு மனுதாரர்கள்.

**செயல் அலுவலர்,**
**அன்னூர் பேரூராட்சி,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.** — எதிர் மனுதார்..

ஆணை.

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் பேரூராட்சியினை சேர்ந்த திரு என். வெங்கடேஷ் மற்றும் மூவரின் 29.01.2013, 30.01.2013, 6.02.2013, ஆகிய நாளிட்ட புகார் மனுக்கள் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 5787/2013/இ.2/நாள். 02.06.2016ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 09.06.2016ல் பெறப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண். 537/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

மேற்படி முறையீட்டு மனுதாரர்கள் தங்களது முறையீட்டு மனுவில் கோவை மாவட்டம், அன்னூர் பேரூராட்சியில் 2012–13ம் நிதியாண்டில், நபார்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூன்று குட்டைப்பணிகள் முறையாக நடைபெறாமலும், மேற்படி

குட்டைகளில் இருந்து எடுக்கப்பட்ட மண் விற்கப்பட்டதாகவும் தெரிவித்து விசாரணை கோரி தங்களது மனுவினை சமர்ப்பித்துள்ளனர்.

இம்முறைமன்ற நடுவ 15.06.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில், முறையீட்டு மனுவினை 2015ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (முறையீட்டு மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதி–6ல் நிர்ணயிக்கப்பட்டவாறு கட்டணம் ரூ.10/–க்கான நீதி மன்ற வில்லைக் கட்டணத்துடனும், விதி–4ல் நிர்ணயிக்கப்பட்டவாறு படிவம்–1ல் மனுவினை பூர்த்தி செய்து, புகார் மனுவிற்கான அத்தாட்சி ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

ஆனால் மேற்படி முறையீட்டு மனுதாரர்கள் தங்களது புகார் மனுக்களை நாளது தேதி வரை உரிய முறையில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இம்முறைமன்ற நடுவ 02.12.2016ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பாக மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தங்களது விளக்கங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 23.01.2017 அன்று நேரில் ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர்களுக்கு ஆணையிடப்பட்டது. ஆனால் மேற்படி விசாரணக்கும் எந்த முறையீட்டு மனுதாரரும் ஆஜராகாததோடல்லாமல் அதற்கான எந்த விளக்கத்தினையும் அளிக்கவில்லை

இம்முறைமன்ற நடுவ 03.12.2016ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து அன்னூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

அன்னூர்பேரூராட்சிசெயல்அலுவலர்தனது கடித ந.க.எண். 866/2016/அ/நாள்.15.12.2016ன் மூலம் மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அரசாணை எண்.217/நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.23.08.2012ன்படி கோவை மாவட்டம், அன்னூர் பேரூராட்சியில் உள்ள கீழ்கண்ட ஊரணிகளை தூர்வாரி, பலப்படுத்துவதற்கு நபார்டு திட்டம் 2012–13ன் கீழ் ரூ.60.00 லட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டதாகவும், பணிகள் கோவை மண்டல பேரூராட்சி உதவி செயற்பொறியாளர் அவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் விளம்பரம் செய்யப்பட்டு, 28.09.2012 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, 29.09.2012ல் சரவணம்பட்டி பேரூராட்சி தொகுப்பு இளநிலை பொறியாளரால் ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டு பேரூராட்சி மன்றத் தலைவரின் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி முன் அனுமதி வழங்கியதின்பேரில் 09.10.2012ல் பணிகளை மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

| வ.எண். | திட்டத்தின் பெயர் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் (நபார்டு 2012-13) | 1.அன்னூர் பேரூராட்சி குன்னத்தூராம்பாளையம் க.ச.எண்.307/ஏ, ஊரணி மேம்பாடு செய்தல் | 20.00 | திருவாளர்.ஸ்ரீ.செந்தூர் வேலன் இன்ப்ராஸ், 115/12, சத்திரோடு, அன்னூர். |
| | | 2.அன்னூர் பேரூராட்சி சொக்கம்பாளையம் க.ச.எண்.614/1ஏ, ஊரணி மேம்பாடு செய்தல் | 20.00 | திரு என்.கிருஷ்ணமூர்த்தி, 1/302, கூத்தன் தோட்டம், எஸ்.குரும்பாளையம், என்.சி.பாளையம் அஞ்சல், அன்னூர். |
| | | 3.அன்னூர் பேரூராட்சி ஆலம்பாளையம் க.ச.எண்.705/1-ஊரணி மேம்பாடு | 20.00 | திருவாளர்.ஸ்ரீ.செந்தூர் வேலன் இன்ப்ராஸ், 115/12, சத்திரோடு, அன்னூர். |
| | | மொத்தம் | 60.00 | |

1.செலவு சீட்டு எண். 333/2013-14 நாள்.30.09.2013ன்படி அன்னூர் பேரூராட்சி, சொக்கம்பாளையம் க.ச.எண்.614/1ஏ, ஊரணி மேம்பாடு செய்தல் பணி மேற்கொண்டமைக்கு, காரமடை பேரூராட்சி தொகுப்பு இளநிலை பொறியாளரால் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதனை கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் அவர்களால் மேலளவுகள் சரிபார்க்கப்பட்டு பட்டியல் மேலொப்பம் செய்து பணி முடிவறிக்கை தொகை ரூ.19,22,000/-க்கு ஆணை வழங்கியதின்பேரில் பிடித்தங்கள் ரூ.2,00,902/-போக நிகரத் தொகை ரூ.17,21,098/- சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் திரு.என்.கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.செலவு சீட்டு எண். 435/2013-14, நாள்.12.11.2013ன்படி அன்னூர் பேரூராட்சி, ஆலம்பாளையம் க.ச.எண்.705/1- ஊரணி மேம்பாடு செய்தல் பணி மேற்கொண்டமைக்கு காரமடை பேரூராட்சி தொகுப்பு இளநிலை பொறியாளரால் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதனை கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் அவர்களால் மேலளவுகள் சரிபார்க்கப்பட்டு பட்டியல் மேலொப்பம் செய்து முடிவு அறிக்கை தொகை ரூ.17,85,692/- ஆணை வழங்கியதின்பேரில் பிடித்தங்கள் ரூ.1,86,156/- போக நிகரத் தொகை ரூ. 15,73,799/- சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் திருவாளர் ஸ்ரீ.செந்தூர் வேலன் இன்ப்ராஸ், 115/12, சத்திரோடு, அன்னூர் அவர்களுக்கு குறுக்கு கோடிட்ட காசோலை மூலம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.செலவு சீட்டு எண்.442/2013-14 நாள். 25.11.2013ன்படி அன்னூர் பேரூராட்சி குன்னத்தூராம்பாளையம் க.ச.எண். 307/ஏ, ஊரணி மேம்பாடு பணி மேற்கொண்டமைக்கு காரமடை பேரூராட்சி தொகுப்பு இளநிலை பொறியாளரால் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதனை கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் அவர்களால் மேலளவு செய்யப்பட்டு பட்டியல் மேலொப்பம் செய்து பணி முடிவு அறிக்கைத் தொகை ரூ.18,32,833/- ல்

பிடித்தங்கள் தொகை ரூ.1,91,634/- போக மீதம் நிகரத் தொகை ரூ.16,28,519/- இப்பணியினை மேற்கொண்ட திருவாளர் ஸ்ரீ.செந்தூர் வேலன் இன்ப்ராஸ், 115/12, சத்திரோடு, அன்னூர் அவர்களுக்கு குறுக்கு கோடிட்ட காசோலை மூலம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று ஊரணிகள் மேம்பாடு செய்தது தொடர்பாக வேலையின் மதிப்பீட்டிற்கு D.Star Survey Consultants , திருவனந்தபுரம் நிறுவனத்தின் மூலம் புவியியல் நிலப்பரப்பு ஆய்வு மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2012-13ம் ஆண்டு நபார்டு திட்டத்தின்கீழ் பெறப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.60.00 லட்சத்தில் மேற்படி பணிகள் ரூ.55,40,525/க்கு மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இப்பொருள் தொடர்பாக முறைகேடுகளோ, நிதியிழப்போ நடைபெற்றதாக 2013-14ம் ஆண்டு தணிக்கையில் ஏதும் சுட்டிக்காட்டப்படவில்லை எனவும் அன்னூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் முறைமன்றநடுவத்தில் அளிக்கப்பட்ட புகார்தாரர்கள் திரு என்.வெங்கடேஷ், திரு.இரா.கருப்பசாமி, மற்றும் திரு ஏ.பி.குப்புசாமி ஆகியோர் சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக புகார் அளிக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் மூன்று ஊரணிகளிலும் மேம்பாடு செய்யும் காலங்களில் வெளிச்சந்தையில் மண் விற்பனை செய்யப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளது தவறுதலாக தெரியவருவதாகவும், இது தொடர்பாக 2013ம் ஆண்டு முதல் நாளது வரை தினசரி நாளிதழ்களில் எவ்வித புகார்கள் முறைகேடுகள் சம்பந்தமாக எந்த செய்தியும் வரப்பெறவில்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 22.09..2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி பொருள் தொடர்பாக தனது விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய, இம்முறைமன்ற நடுவத்தில் 13.11.2017 அன்று ஆஜராக தெரிவித்து அன்னூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவத்தில் 13.11.2017 அன்று ஆஜரான கோவை மாவட்டம், அன்னூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு க.தனசேகரன், மேற்படி பொருள் தொடர்பாக தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........திரு.வெங்கடேஷ், திரு. ராஜேந்திரன், திரு.கருப்பசாமி, திரு .குப்புசாமி ஆகியோர் அனுப்பிய மனுவிவரங்கள் பற்றி தனக்குத் தெரியும் எனவும், இது குறித்து தன்னால் 15.02.2017ல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் அன்னூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து சம்பவங்களும் தனது பணிக்காலத்திற்கு முன்பு இப்பேரூராட்சியில் செயல் அலுவலராக பணி புரிந்த திரு.கல்யாணசுந்தரம் என்பவருடைய பணிக்காலத்தில் நடைபெற்ற பணிகள் தொடர்பானவை எனவும், புகார் மனுவில் உள்ள நடந்த பணிகள் தன்னால் பார்க்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். குற்றச்சாட்டுகளில் சொன்னது போல் இல்லாமல் பணிகள் முறையாக நடந்துள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் அன்னூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனுக்கள், மேற்படி புகார் மனுக்களுக்கு அன்னூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர்களுக்கு தங்களது முறையீட்டு மனுவினை விதிகளின்படி உரிய முறையில் சமர்ப்பிக்கத் தெரிவித்தும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் மேற்படி முறையீடு குறித்து தங்களின் விளக்கங்களை தெரிவிக்க கூடுதல் வாய்ப்பாக இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்தும், முறையீட்டு மனுதாரர்கள் மேற்படி வாய்ப்பினை பயன்படுத்த தவறியுள்ளதோடு தாங்கள் ஆஜராகாததிற்கான எந்த விளக்கமும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை. ஏனவே இம்முறையீடு தொடர்பாக முறையீட்டு மனுதாரர்கள் தெரிவிக்க ஏதும் இல்லை எனக் கருதியும், அன்னூார் பேரூராட்சி செயல் அலுவரின் அறிக்கையினை ஏற்று இப்பொருள் தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தால் தொடர் நடவடிக்கை கைவிடப்படுகிறதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு ஜூலை திங்கள் 09 -ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்

பெறுநர்

1.திரு என். [illegible] B.E.,M.B.A  
ராஜேஸ்வரி நகர்,  
கணேசபுரம் அஞ்சல்,  
S.S. குளம் (வழி)  
கோயம்புத்தூர். 641 107

2.திரு. A.K. ராஜேந்திரன்,  
9/37/228, குமரன் காலனி,  
கோவை ரோடு,  
அன்னூார் அஞ்சல்,–641 653

3.திரு.இரா.கருப்பசாமி,  
2/46, வடக்கு வீதி, பிள்ளையார்கோவில் பின்புறம்,  
ஆயிமாபுதூர்,  
ஒட்டர்பாளையம் அஞ்சல்,  
அன்னூர்–641 653.

4.திரு ஏ.பி.குப்புசாமி,  
2–D, அங்கப்ப முதலியார் காலனி,  
ராஜீவ் வீதி,  
அன்னூர்–641 653.

5.செயல் அலுவலர்,  
அன்னுர் பேரூராட்சி,  
கோவை மாவட்டம்.

6.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,  
கோவை மண்டலம்,  
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,  
கோயம்புத்தூர்.